# மழை அற்புதங்கள்

இந்துக்கள் மழை குறித்து வைத்திருக்கும் நம்பிக்கைகள் விநோதமானவை. முற்றும் துறந்த முனிவர்களும் பத்தினிப் பெண்களும் மழையைக் கொண்டுவர முடியும் என்றும் யாக யக்ஞங்கள் மழையைத் தருவிக்கும் என்றும் நம்பினார்கள். சில ராகங்களைப் பாடினால் மழை வரும் என்றும் கழுதைகள், தவளைகளுக்குக் கல்யாணம் செய்துவைத்தால் மழை வரும் என்றும் நம்பினார்கள் வானில் மிகப் பிரகாசமாக ஒளிவிடும் வெள்ளி கிரகத்தின் நிலையை வைத்தும் மழை வருமா வறட்சி வருமா என்றும் கூறினார்கள். மழை பற்றிய பாடல்களிலும் பழமொழிகளிலும் அவர்களுடைய அனுபவ அறிவைப் பார்க்கமுடிகிறது. இதோ சில சுவையான செய்திகள்:

1.வெள்ளி குறித்த தமிழ் பாடல்கள்:

புறநானூறு என்னும் தமிழ் சங்க இலக்கிய நூலில் வெள்ளி கிரகம் பற்றிய பாடல்கள் (383 முதல் 390 வரை) அனைத்தையும் வரிசையாக அடுக்கி வைத்துள்ளார்கள். இதிலிருந்தே அவர்களுக்கு இதன் மீது எவ்வளவு நம்பிக்கை இருந்திருக்கிறது என்பது தெரிகிறது.

“வசையில் புகழ் வயங்கு வெண்மீன்

திசைதிரிந்து தெற்கேகினும்”-(பட்டி 1-2)

வெள்ளி கிரகம் தெற்கே போயினும் எங்கள் காவிரியில் தண்ணீ ர்வரும் என்கிறார் உருத்திரங்கண்ணனார். இதிலிருந்து வெள்ளி தெற்கே போவது நல்லதல்ல என்பது தெரிகிறது.

“வறிது வடக் கிறைஞ்சிய சீர் சால் வெள்ளி

பயங்கெழு பொழுதோ டாநியம் நிற்ப” -(பதிற் 24) என்றும்

“வெள்ளி தென்புலத் துறைய விளைவயல்

பள்ளம் வாடிய பயனில் காலை” -(புறம் 338) என்றும் கூறுவது

இதே கருத்தைத் தான். கபிலர் பாடிய (புறம்.117ஆம்) பாடலில்

மைம்மீன் புகையினும் தூமம் தோன்றினும்

தென்றிசை மருங்கின் வெள்ளியோடினும்

கெட்டது என்று கூறுகிறார். மைம்மீன் என்பது சனி கிரகம், தூமம் என்பது வால் நட்சத்திரம். புகையினும் என்பதற்கு சனி தனது பகை வீ டுகளானஇடபம்,சிங்கம்,மீனம் ஆகிய ராசிகளில் புகுந்தாலும் கெடுதி என்பது பழைய உரைகாரர்கள் தரும் பொருள்.

2. பத்தினிப் பெண்களால் மழை:

திருவள்ளுவர் தான் இந்தக் கருத்தை வலுவாக முன்வைக்கிறார்.

தெய்வந் தொழாள் கொழுநன் தொழுதெழுவாள்

பெய்யெனப் பெய்யும் மழை (குறள் 55)

அதாவது வேறு எந்த தெய்வத்தையும் தொழாது, தன்னைக் கண்ட கணவனை மட்டும் தொழுது ,துயில் நீங்கி எழும் மனைவி பெய் என்றால் உடனே அவள் சொல் கேட்டு மழையும் பெய்யும் என்பது பழைய உரைகாரர்கள் தந்த பொருள். தற்காலத்தில் வள்ளுவர் கூறியதை திரித்தும் மாற்றியும் பல உரைகள் வந்து கொண்டிருக்கின்றன. நாம் வள்ளுவர் காலத்துக்குப் பயணம் செய்தோமானால் அவர் சொல்வதில் ஐயுற மாட்டோம். இது அவர் காலத்தில் நிலவிய கருத்து.

3. முனிவர்களால் மழை:

முக்காலமும் உணரும் முனிவர்கள் நாட்டிற்குள் நுழைந்தவுடனே மழை பெய்யும் என்றும் நம் முன்னோர்கள் நம்பினார்கள். அங்க தேசத்தில் வறட்சி ஏற்பட்டவுடன் ரோமபாதன் என்ற மன்னனுக்கு கவலை வந்தது. விபாண்டகருக்கும் ஊர்வசிக்கும் பிறந்த ரிஷ்யஸ்ருங்க (கலைக் கோட்டு) முனிவரை அழைத்துவந்தால் மழை பெய்யும் என்று மந்திரிகள் கூறவே அவர்கள் ஒரு திட்டம் போடுகின்றனர். அவரது தந்தை இல்லாத நேரத்தில் தேவலோக அழகிகளை அனுப்பி ஆடவைத்து ஆசைகாட்டினால் அவர்களைப் பின்தொடர்ந்து இவர் வந்துவிடுவார் என்று கூறுகின்றனர். ரிஷ்யஸ்ருங்கர் தன் வாழ்நாளில் பெண்வாசனையே இல்லாமல் வாழ்ந்தவர். இப்படிச் சில பெண்கள் ஆடியும் பாடியும் அவரை அழைக்கவே அப்பாவியாக அவரும் வருகிறார். நாட்டில் மழை கொட்டொ கொட்டென்று கொட்டியது என்பது புராணக் கதை. இதில் மற்றொரு விஷயமும் உள்ளது. மனிதனின் உளவியலும் இங்கே கற்பிக்கப் படுகிறது. பாலுணர்வு என்பது உடன்பிறந்த இயற்கையான ஒரு உணர்வு என்பதும் அதில் வியப்பதற்கு ஒன்றும் இல்லை என்பதும் புலனாகிறது. 'சொல்லித் தெரிவதில்லை மன்மதக் கலை' என்று இதையே பாரதியார் அழகாகப் பாடியுள்ளார்.

4.கழுதைக் கல்யாணமும் தவளைக் கல்யாணமும்

மழையை உண்டாக்க கழுதைகளுக்கும் தவளைகளுக்கும் கல்யாணம் செய்து வைத்தால் மழைக் கடவுள் மனம் மகிழ்ந்து மழை பொழிவான் என்பது இந்திய துணைக் கண்டம் முழுதுமுள்ள நம்பிக்கை. கர்நாடக மாநிலத்தில் நடந்த கழுதைக் கல்யாணமும் மேற்கு வங்கம் ,வங்காள தேசம், அஸ்ஸாம் ஆகிய இடங்களில் நடந்த தவளைக் கல்யாணமும் பத்திரிக்கைகளீ ல்புகைப் படங்களுடன் வெளியாகியுள்ளன. முறையாக புரோகிதரை அழைத்து, பிராணிகளுக்கு திருமண புத்தாடைகளை அணீ வித்து பெரிய திருமண விருந்தும் படைத்து இந்த திருமணங்கள் நடத்தப்பட்டன. மக்களின் நம்பிக்கை எவ்வளவு வேரூன்றியுள்ளது என்பதை அக்காட்சிகளை நேரில் கண்டோர் அறிவர்.

5. யாக யக்ஞங்களால் மழை:

அரசு, மா மரக் குச்சிகளை நெய்யில் தோய்த்து மந்திரம் சொல்லி ஹோமம் செய்தால் மழை பெய்யும் என்பதும் வேத காலம் முதல் உள்ள நம்பிக்கையாகும். உடலில் பாதி

அளவு தண்ணீரில் மூழ்கும்படி நின்றுகொண்டு மழைக் கடவுளான வருணனை நோக்கி மந்திரங்கள் சொன்னால் மழை பெய்யும் என்பதும் வழக்கத்தில் இருக்கிறது.

இது ஓரளவு அறிவியலுக்கு நெருங்கி வருகிறது. தற்காலத்தில் விஞ்ஞானிகள் மேகங்களில் உலர் ஐஸ் எனப்படும் உறைந்துபோன கார்பன் டை ஆக்ஸைடை வைக்கின்றனர். உடனே மழை பெய்கிறது. யாகம் செய்யும்போது எழும் புகை இதே செயலைச் செய்கிறது என்பது ஒருசாரார் வாதம்.

6. இசையால் மழை:

சில வகை ராகங்களைப் பாடினால் மழை பெய்யும் என்பது வடக்கிலும் தெற்கிலும் காணப்படுகிறது. வட இந்தியாவில் மல்லார் என்ற ராகத்தை இசைத்தால் மழை பெய்யும் என்பார்கள். தமிழ் நாட்டில் ஒரு சுவையான நிகழ்ச்சி, சங்கீத மும்மூர்த்திகளில் ஒருவரான முத்து சுவாமி தீட்சிதர் வாழ்க்கையில் நடந்தது. அவர் எட்டயபுரத்துக்குச் சென்றபோது அந்தப் பகுதி முழுதும் வறட்சியால் வாடியிருந்தது. இதைக் கண்டு மனம் நொந்த தீட்சிதர் அமிர்தவர்ஷனி ராகத்தில் அம்பாளைத் தியானித்து ஒரு பாடல் பாடினார். உடனே மழை பெய்து பூமியையும் மக்களின் உள்ளங்களையும் குளிர்வித்தது.

7. அரசனால் மழை:

அரசர்களின் நியாயமான ஆட்சியில் மழை தவறாது பெய்யும் என்பதும் மக்களின் நம்பிக்கை. மாதத்தில் மூன்று முறை மழை பெய்ய வேண்டும் என்பது வடமொழி தமிழ் மொழிப் பாடல்களில் உள்ளது. ஒரு மன்னன் நேர்மையாக ஆண்டால் அங்குள்ள ஆறு குளங்களில் மானும் புலியும் சேர்ந்து நீர் குடிக்கும் ,ஒன்றை ஒன்று தாக்காது என்றும் புலவர்கள் பாடியுள்ளனர்.

8. பழமொழிகளில் மழை:

எறும்பு முட்டை கொண்டு திட்டை ஏறினால் மழை வரும் என்று ஒரு பழ மொழி உண்டு. எறும்பு, வாயில் முட்டைகளுடன் மேட்டுப் பகுதிக்கு வரிசையாக ஊர்ந்துசெல்வதைப் பார்த்திருக்கலாம். இது போல தெற்கே போன வெள்ளீ வடக்கே வந்தால் மழை என்பதும் வழக்கில் உள்ளது. சுக்கிரன் எனப்படும் வெள்ளி வடக்குப் போதல்,தெற்குப் போதல் என்பதெல்லாம் வானவியலாளரின் பரிபாஷைகளாகும். வெள்ளி கிரகம் வருடத்தில் சில மாதங்களில் காலையிலும் சில மாதங்களில் மாலையிலும் வானத்தில் மிகவும் பிரகாசமாகத் தோன்றும்.

தமிழர்கள் இவைகளையெல்லாம் பாடல்களிலும் பழமொழிகளிலும் சொல்ல வேண்டுமானால் பல நூற்றாண்டுகள் அதைக் கவனித்து ஆராய்ந்திருக்க வேண்டும் என்பதில் ஐயமில்லை.

*******************